# முப்பெரும் விழாக்காணும் ரிபாயிய்யா மகளிர் அறபுக் கலாசாலை

அல்ஹாஜ் மௌலவி ஏ. ஸீ. அஹ்மத் பளீல் (காஸிமி)
கலீபத்துர் ரிபாய்யி – (All Island J.P.)
பிரதம கதீப் - தெவட்டகஹ ஜும்மா மஸ்ஜித்
கொழும்பு – 07.

மார்க்கக் கல்விக் கூடம் ஓர் ஊரில் திறக்கப்படுவது அவ்வூரில் ஒரு சிறைச்சாலை உருவாகுவதை மூடிவிடுகிறதென சான்றோர் சான்று பகர்கிறார்கள்.

இந்த வகையிலேயே ஸாதாத்மார்கள் தரீக்காக்களின் ஷேஹ்மார்கள் நாட்டின் பல கோணங்களிலும் தேவைக்கேற்ப அறபு மத்ரஸாக்களை நிறுவி அரும் பெரும் தீன் பணியாற்றினார்கள். இன்று இலங்கையில் பழமை வாய்ந்த சகல அறபு மத்ரஸாக்களும் ஸூபியாக்களான ஷேஹ்மார்களால், தரீக்காக்களை பின்பற்றிய தனவந்தர்களால் ஆரம்பிக்கப்பட்டவைகளே அன்றி இல்லை.

இலங்கையில் இஸ்லாத்தின் உதயம் முதல் இன்றுவரை அறிவிற்காக ஸூபித்தரீக்காக்கள் அளவில்லாத சேவையாற்றி வருகின்றன. 1950 க்கு பின்னர் இந்த நாட்டிற்கு எத்தனையோ இறக்குமதிகள் ஒவ்வொரு பெயரில் புதுப் புது கொள்கைகளை முன்வைத்துக் கொண்டிருக்கின்றன. இவர்களால் அறிவிற்கும் அறிஞர்களுக்கும் இருந்த மதிப்பு குறைக்கப்பட்டு கண்டவர்கள் எல்லாம் மார்க்கத்தில் தீர்ப்பு வழங்கும் ''முப்திகளாக'' மாறியுள்ள அவல நிலையை காணமுடிகின்றது. இவர்கள் இலங்கையில், தரீக்காவுடைய சேஹ்மார்களால் தரீக்காவுடைய வேலைகளையும் ஏனைய தீன் பணிகளையும் செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட எத்தனையோ பள்ளிவாயல்கள், ஸாவியாக்கள், தக்கியாக்கள், அறபு மத்ரஸாக்கள் போன்றவற்றை அவர்களின் அமானிதம் அற்ற தன்மையால் தன்வசம் ஆக்கியது மற்றும் அன்றி எதற்காக இவைகள் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த அமல்கள் சகலதையும் அடியோடு நிறுத்திவிட்டார்கள். அமானிதத்தைப்பற்றி இறைவன் திருமறையில் கூறும் வசனங்கள் இவர்களின் செவிகளைக் கிட்டவில்லையோ ஐயோ பரிதாபம்!

இன்றும் தரீக்காவுடைய சேஹ்மார்கள் அவர்களின் பாட்டனார்கள் செய்த பணியைக் கைவிடாமல். காலத்தையும் தேவையையும் உணர்ந்து தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நீண்ட நாட்களாக மாத்தறை மாவட்டத்தில் பெண்களுக்கான ஒரு அறபு மத்ரஸா இல்லாத குறை இருந்துவந்தது. முன்னைய காலங்களைப் போல் இதனையும் ஸாதாத்மார்கள், சேஹ்மார்களின் கைகளால் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது இறைவனின் நாட்டம். இந்த நீண்ட நாள் தேவையை நிவர்த்தி செய்வதற்காக வல்ல நாயன், அண்ணல் நபிகளாரின்

அருமைப் பேரர்களில் ஒருவரான சங்கைமிகு U. P. ஆசிக் தங்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்தான்.

ரிபாயிய்யா தரீக்காவின் ஆத்மீகத் தலைவர் U. P. ஆசிக் தங்கள் அவர்கள் ரிபாயிய்யா மகளிர் அறபுக் கலாசாலையை ஆரம்பிக்கும் முயற்சியை மேற்கொள்ளும் போது கடுமையான பணப் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த நிலையில் இவர்களின் முரீதீன்கள், முஹிப்பீன்களில் நல்ல உள்ளம் படைத்த சிலர் இவர்களுக்கு உதவ முன்வந்தார்கள். U. P. ஆசிக் தங்கள் அவர்கள் இறைவன் மேல் தவக்கல் வைத்து தனது பாதங்களை முன் எடுத்து வைத்தார்கள். இதன் பிரதிபலனாக ரிபாயிய்யா மகளிர் அறபுக் கலாசாலை பத்துப் பட்டதாரி மௌலவியாக்களை சமூகத் தொண்டுக்காக பெருமையுடன் முன்வைக்கின்றது.

இந்த மத்ரஸா ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை ஒரு வாடகை வீட்டிலேயே நடாத்தி வந்தனர். இதில் கற்கும் மாணவர்கள் இன்னோரன்ன துன்பங்களை ஒவ்வொரு நாளும் சந்தித்து வந்தார்கள். மழை பொழிந்தால் தண்ணீர் உள்ளேவருவதாலும், உறங்குவதற்கு, பாடங்களை நடத்துவதற்கு, போதுமான இடவசதியின்மையாலும் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்களே என்ற கவலை நாளுக்கு நாள் ஆசிக் தங்கள் அவர்களின் உள்ளத்தை வாட்டிக் கொண்டே இருந்தது. இதற்காக தனது சொந்த வேலைகளை எல்லாம் பொருட்படுத்தாது நல்ல உள்ளம் படைத்த தனவந்தர்களை அனுகி நிலைமையை விளக்கிக் கூறி ரிபாயிய்யா மகளிர் அறபுக் கலாசாலைக்காக ஒரு புதுக் கட்டிடத்தையும் இறைவன் அருளால் தனது ஜீவிய காலத்திலேயே உருவாக்கி விட்டார்கள்.

இது மாத்திரம் அன்றி கப்புவத்தை முஹியத்தீன் பள்ளிவாயலில் திருமறையை மனனம் செய்வதற்காக ஒரு இடத்தை ஒதுக்கி அதன் வெளிப்பாடாக இன்று பல ஹாபிழ்களை உருவாக்கியுள்ளார்கள். குறுகிய காலத்தில் அவர்களின் கடின உழைப்பின் காரணமாக மாபெரும் பணியை இஸ்லாமிய உம்மாவுக்கு முன்வைத்துள்ளார்கள். இதன் பலனாக ரிபாயிய்யா தரீக்காவின் முரீதீன்கள், முஹிப்பீன்கள், கப்புவத்தை வாழ் மக்கள் இம்மூன்று நிகழ்வுகளையும் முப்பெரும் விழாவாக மிக விமர்சையாகக் கொண்டாடுகிறார்கள்.

U. P. ஆசிக் தங்கள் அவர்களால் பல இன்னல்களுக்கு மத்தியில் தியாக மனப்பான்மையோடு உருவாக்கப்பட்ட இம்மத்ரஸாவில் இருந்து பட்டம் பெற்று வெளியேறும் மௌலவியாக்கள் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத் அமைப்பில் மக்களை வழி நடாத்த வேண்டும். சமூகத்திற்கு மத்தியில் செல்லும் போது நிதானமாக, நீதியாக, பொறுமையாக நடந்து கொள்வது சாலச் சிறந்ததே. இன்னும் ஜீவனோபாயத்திற்காக ஷைத்தானின் மாயவலையில் சிக்கிக் கொண்டு சமூகத்தை சீர்குலைக்க வழி கோலக்கூடாது. இவர்கள் எவ்வேளையிலும் எச்சந்தர்ப்பத்திலும் சங்கைக்குரிய U. P. ஆசிக் தங்களின் வழி நடத்தலைப் பின்பற்றி முரீதீன்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டுமோ, அவ்வாறே ஒழுக்க சீலர்களாக பக்திவான்களாக நடந்து இருலோகத்திலும் ஜெயம் பெறவேண்டும்.

மேலும் ஷெய்கு நாயகமவர்களின் தரீக்காவின் அடிப்படையில் எல்லா வகையான தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முன்வரவேண்டும். அவ்வாறே ஒத்துழைப்பும் நல்க வேண்டும்.

இன்றைய நவீன காலத்தில் யஹூதி நஸாராக்களின் பொறியில் சிக்கி பணத்திற்காகவும் பதவிக்காகவும் பலிக்கடாவாக மாறும் எமது வாலிபர்களை, யுவதிகளை, சிறார்களைக் காப்பாற்றி இஸ்லாமிய சமூகத்தை ஷரீஆவின் அடிப்படையில் தரீக்காவைப் பின்பற்றி இருலோகத்திலும் ஜெயம் பெறும் விதமாக வழி நடாத்திச் செல்லவேண்டும் என்பதே சங்கைமிகு தங்கள் அவர்களின் நோக்கமாகும். (இறைவன் அவர்களின் நோக்கத்தை அவனது திருப்பொருத்தத்தையும் கண்மணி நாயகத்தின் ஷபாஅத்தையும் நாடிச் செய்யும் பணியாக ஆக்கவேண்டும்.)

ஆசிக் தங்கள் அவர்கள் எவ்வாறு தனது நேரத்தையும் காலத்தையும் செலவு செய்து இக்கல்லூரிக்காகவும் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்காகவும் பாடுபட்டார்களோ அதேபோன்று அனைத்து முரீதீன்களும், முஹிப்பீன்களும் அவர்களுடன் தோளோடு தோள் நின்று சேவையாற்ற முன்வரவேண்டும். இக்கல்லூரியை எதிர்காலத்தில் சகல வசதிகளுடனும் முன்னேற்றகரமானதாக நடாத்திச் செல்வதற்கு உதவி செய்ய வேண்டும்.

இக்கல்லூரிக்கு சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஸுன்னத் ஜமாத் அடிப்படையில் எழுதப்பட்ட நூல்களை உள்ளடக்கிய நல்லதோர் நூலகம் அமைத்துக் கொடுப்பது அவசரத் தேவையாகும். அதேபோன்று மாணவர்களுக்கு கணனி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதைப் பயிற்றுவிப்பதற்காக சிறந்த ஆசிரியர்களைத் தேடிக் கொடுத்தல் அல்லது முரீதீன்களில் முஹிப்பீன்களில் திறமைசாலிகள் அனுபவம் உள்ளவர்கள் அப்பணியை தானாகச் செய்ய முன்வருதல் வரவேற்கத்தக்க விடயமாகும்.

சென்ற காலங்களில் அறபுக் கலாசாலைகள் மஷாயிகுமார்கள், ஸாதாத்மார்களின் வழிகாட்டலிலும், போதனையிலும், தூரநோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டன. அப்போது மனிதர்கள் ஒற்றுமையுடனும், பரஸ்பர புரிந்துணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும் வாழ்ந்து வந்தனர்.

ஆனால், இன்று முரீதீன்கள், முஹிப்பீன்கள் ஷெய்குமார்களை உலகளாவிய தேவைகளுக்காகவே நாடிச் செல்கின்றனர். மறுமை வாழ்வின் நோக்கம் புறக்கணிக்கப்படுகின்றது.

இதனால் முரீதீன்கள், முஹிப்பீன்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்து மோதல்களும், ஒற்றுமைச் சீர்குலைவும் ஏற்பட்டு தம்மையே குட்டிச் சுவராக்கிக் கொள்கிறார்கள். ரஸூல் (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் “நற்குணமுள்ளவனே நம்மில் சிறந்தவன்” எனவே, பணத்திற்காக குப்ரியத்தை செய்யத் துணியும் கெட்ட குணங்கொண்டவர் நம்மில்

பெருகிவிட்டனர். அந்தோ பரிதாபம்! எனவே மார்க்க அறிவு தூய வடிவில் கொடுக்கப்பட வேண்டும்.

கருத்து வேற்றுமையால் பிரிந்து சிதறிப் போகும் நிலையை அடைந்தால், எம்மால் ஒருபோதும் ஷரீஅத் அடிப்படையில் வாழமுடியாது. மாறாக யஹுூதி, நஸாராக்களின் வலையில் சிக்கி சமூகம் சின்னா பின்னமாக மாற நேரிடும். இந்நிலையே, தற்போது முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் ஒளியிலிருந்து இருளை நோக்கி வெகுவிரைவாக வீர நடை போடுவதாக மேற்கத்தியவாதிகள் பறைசாற்றுகிறார்கள். ஏனெனில் நிதானமான, ஆழ்ந்த அறிவுள்ள பக்தியுள்ள தலைவர்களின் கீழ் ஒன்று திரள வேண்டிய இஸ்லாமியர்கள், உலகளாவிய ரீதியில் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறி, இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் துரோகம் விளைவிக்கின்ற, சதி நாசகாரத் தலைவர்களின் கும்பலாக மாறிக் கொண்டேயிருக்கிறார்கள் என்பதே வேதனைக்குரிய விடயமாகும்.

இதனால் ஷரீஅத் அமைப்பில், தரீக்கா ரீதியில் வாழ்கின்ற முஸ்லிம்களின் உயிர், உடமை, மானம் பறிக்கப்பட்டு அல்லோலகல்லோலப்படுகின்ற அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் பல அச்சுறுத்தல்கள் அடாவடித்தனங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

எனவே, ரஸுூல் (ஸல்) அவர்களையும், அஹ்லுல் பைத்துக்களையும் பின்பற்றும் காமிலான ஷெய்குமார்களின் வழி காட்டலிலும், ஆலோசனையிலும், போதனையிலும் தான் நம் இஸ்லாமிய சமூகம் நேரிய பாதையில் செல்லலாம் என்பதை உணரவேண்டும், உணர்த்த வேண்டும். இந்நன்னோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு முரீதீன்கள், முஹிப்பீன்கள் அயராது பாடுபட்டால், நிச்சயம் நாம் இம்மையிலும், மறுமையிலும் ஈடேற்றம் பெறலாம் என்பது உறுதி.